# இராம கோபாலன்

*நிறுவன அமைப்பாளர்*

59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676


5-2-2010

## ஆலய சொத்துகளைத் தனியார்க்குத் தாரைவார்க்கும் அறநிலையத்துறைக்கு வயிறு எரிந்து சாபம் விடும் அறப்போராட்டம் (12-2-2010) இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர் இராம கோபாலன் எச்சரிக்கை!

ஆலயத்தை அறம் வளர்க்கும் இடமாக, கலைகள் வளர்க்கும் இடமாக, பொதுமக்கள் இறை தரிசனத்தோடு ஆன்மீக உணர்வு பெறும் இடமாக முனிவர்கள், ரிஷிகள், தபசிகள், அரசர்கள், மக்கள் என எல்லோரும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள். என்றென்றும் ஆலயப் பணிகள் தொய்வின்றி நடந்தேறிட தங்களது சொத்துகளையும், வைரம், மரகதம், தங்கம், வெள்ளி போன்ற விலையுயர்ந்தவற்றையும் வாரி வழங்கினார்கள்.

மொகலாயர்கள், ஆங்கிலேயர்கள் ஆக்கிரமித்தபோதுகூட அசையும் சொத்துகளான வைர வைடூரியங்களையும் தங்கத்தையும் கொள்ளையடித்தனர். ஆலய சிற்பங்களையும் மூளியாக்கி சிதைத்திருப்பதை இன்றும் நாம் கோயில்களில் காணலாம்..

இத்தனை துன்பங்களையும் தாங்கிக்கொண்டு, அவர்களை எதிர்த்துப் போராடிக்கொண்டு, இந்து மதம் தன்னைத் தற்காத்துக்கொண்டு, தனது உயிர்மூச்சான ஆன்மீகத்தை, ஆலய வழிபாடுகளைப் பரம்பரை பரம்பரையாகக் காத்து இன்று நாம் சுதந்திரமாக நமது சமய சடங்காசாரங்களைச் செய்ய வழி அளித்துள்ளனர்.

இது நீண்ட நெடுங்காலமாக இருந்திட ஆலயத்திற்குச் சொத்துகளை வாரி வழங்கினர். கொள்ளையனும், ஆக்கிரமிப்பாளனும் ஒழிந்த பின்னரும் இந்து மதத்திற்கு விடிவுகாலம் பிறக்கவில்லை. சமயச் சுதந்திரமோ, சமயத்தில் நம்பிக்கையுள்ளோர்களின் வழிகாட்டுதலோ ஏற்படாதவாறு அரசின் உடும்புப்பிடி கோயிலைச் சின்னாபின்னமாக்கி வருகிறது.

சுதந்திர பாரதத்தில் நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசியல்வாதிகள் நமது தலைமேல் ஏறிக்கொண்டு ஆலயக் கலைகளை அழித்தனர், கோயில் ஆபரணங்களைக் (நகைகள்) கொள்ளையடித்தனர், இன்று ஆன்மீகம் இருக்க வேண்டிய இடத்தில் அரசியல்வாதிகளின் ஆட்சி நடக்கிறது.

வேறு எந்த மத சொத்துகளிலும் கை வைக்கத் துணியாத இவர்கள், தங்களுக்குக் கிடைத்த அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துகிறார்கள்.

ஆலய நிலங்களைத் தனியாருக்கு நிரந்தரமாகவோ, நீண்ட குத்தகையாகவோ நிரந்தரமாகத் தொலைத்திட இந்து சமய அறநிலையத்துறை திட்டம் தீட்டியுள்ளது. நீண்ட குத்தகைக்கு விட்டதைத் திரும்பப் பெற முடியாது. இதற்கு வசதியாக அரசு ஆணை ஜனவரி 29, 2008 இல் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மூன்று பெரிய மதிப்புள்ள நிலங்களைத் தனியாருக்குத் தாரைவார்க்க அரசு முனைந்துள்ளது. அவை, ஒன்று, ஐடி எக்ஸ்பிரஸ் பகுதியில் தாம்பரம் தாலுகாவில் உள்ள ஸ்ரீநிவாச பெருமாள் கோவிலுக்குச் சொந்தமான செம்மணஞ்சேரியில் உள்ள 10 ஏக்கர் நிலம், ஆகாடா ஹெல்த் சயின்ஸ் என்ற நிறுவனத்திற்கு 29 ஆண்டு 11 மாதங்கள் குத்தகைக்கு விட்டு, அங்கு அவர்கள் உலகத்தரத்தில் மருத்துவமனை கட்டிட அனுமதிக்க உள்ளதாகவும், இரண்டாவது 13 கோயில்களுக்குச் சொந்தமான திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள எலயம்மேடு, புதுவயல், பொன்னேரி கிராமங்களில் உள்ள நிலங்களை மஹேந்திரா வேர்ல்ட் சிட்டிக்கு நீண்ட குத்தகைக்குத் தரவும், மூன்றாவது அருள்மிகு கபாலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான சென்னை அடையாரில் உள்ள ஒரூர் தோட்டம் பகுதி நிலத்தை பிரபல அரசியல்வாதிகளின் குழந்தைகள் படிக்கும் தனியார் கல்வி அறக்கட்டளை ஒன்றிற்குத் தரவும் ஏற்பாடுகள் நடைபெறுவதாக பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது(டைம்ஸ் ஆஃப் இந்தியா பிப்-2). இவை தவிர பல கோடி மதிப்புள்ள சொத்துகளையும் கபளீகரம் செய்து ஏப்பம் விடத் துடித்துக்கொண்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அரசாங்கத்திற்குக் கோயிலை எப்படி இழுத்து மூடுவது என்பது மட்டுமே நோக்கமாக இருப்பதாகத் தெரிகிறது. இதனைப் பக்தர்கள் வேதனையோடு பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி சொத்துகள் கொள்ளை போனால் வருமானம் இல்லை என்பதைக் காரணம் காட்டி ஆலய விழாக்களை நிறுத்தியதுபோல ஆலயங்களை இழுத்து மூடவும்

...2

அரசியல்வாதிகள் திட்டமிடுகிறார்கள். இந்த அரசாங்கத்திற்கு ஆன்மீகத்திலும் நம்பிக்கையில்லை. அதனாலேயே இதுபோன்ற செயல்களைச் செய்யத் துணிகிறார்கள். தாங்கள் இலவசம் என்ற பெயரில் லஞ்சம் கொடுத்து பெற்ற அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பவன் பக்தனாக இருக்க முடியாது.

இந்துக்கள் தங்களை - தங்களது மதத்தைத் தற்காத்துக் கொள்ள இறைவனிடம் முறையிடுவதைத்தவிர வேறு வழியில்லை! இறைவனிடம் முறையிடுவோம். கண்டிப்பாக பக்தர்களின் கண்ணீருக்கு இறைவன் பதில் கொடுப்பான். வருகின்ற பிப்ரவரி 12ஆம்தேதி தை கடைசி வெள்ளிக்கிழமை அன்று எல்லா அம்மன் ஆலயங்கள் முன்பு தாய்மார்களும், பெரியோர்களும் காலையில் சாப்பிடாமல் வந்து மண்தூற்றி, ஆலயத்தை நலிவடையச் செய்பவர்களுக்குச் சாபம் விடும் போராட்டத்தை இந்து முன்னணி நடத்திடத் தீர்மானித்துள்ளது. தங்களை ஒன்றும் செய்ய முடியாது என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்குத் தக்க பதிலடியை இறைவன் கொடுப்பான் என்பது உறுதி என்ற நம்பிக்கையோடு இந்த மண் வாரி தூற்றும் அறப்போராட்டத்தில் இறங்குவோம்.

இதற்கு இறைவன் கண்டிப்பாய் செவிசாய்ப்பான், தகுந்த தண்டனையை அளிப்பான், பிறகாவது இவர்கள் திருந்தட்டும் கோயில் சொத்தில் கைவைப்பதை நிறுத்தட்டும்!

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**

நிறுவன அமைப்பாளர்

---

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**